## Accountancy 12 Marks Important Q & A

**1.தேய்மானம் வரைவிலக்கணம் :** கார்டர் அவர்களின் கூற்றுபடி தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும் ஒரு சொத்தின் மதிப்பிலுண்டாகும் படிப்படியான நியைான குறைவே தேய்மானம் ஆகும்.

**தேய்மானம் நீக்க வேண்டியதன் தேவைகள் : (அ)சரியான லாபம் அல்லது நட்டம் கண்டறிய :**
ஓவ்வொரு கணக்காண்டிலும் சரியான நிகர லாபம் அல்லது நிகர நட்டம் கண்டறிய தேய்மானம் ஒரு செலவாக கருதப்பட்டு வருவாயில் சரிசெய்யப்பட வேண்டும்.

**(ஆ)உண்மையான நிதிநிலையை உணர்த்த :**
இருப்புநிலைக்குறிப்பில் உண்மையான நிதிநிலையை உணர்த்த வேண்டுமெனில் அதில் இடம் பெற்றுள்ள சொத்துகளின்உண்மையானமதிப்பிலிருந்துதேய்மானம்கழிக்கப்பட்டுகாட்டப்பட்டிருக்க வேண்டும்.

**(இ)உண்மையான உற்பத்தி செலவை கண்டறிய :**
பொருள்களின் உண்மையானஉற்பத்திச் செலவை கண்டறிய நிலைச்சொத்துகளின் மீதான தேய்மானம் விலக்கப்பட்டிருக்க வேண்டும்.

**(ஈ)சட்டத் தேவைகளைப் பின்பற்ற :**நிறுமங்கள் சட்டம் 1956 பிரிவு 205 (1) ன் படி பங்காதாயம் அறிவிப்புக்கு முன்பாக நிறுமங்கள் கட்டயமாக நிலைச்சொத்துகளின் மீதான தேய்மானம் விலக்கி இருத்தல் வேண்டும்.

**(உ)பழையநிலைச் சொத்துகளுக்கு பதிலாக புதிய நிலைச் சொத்துகளை இடம்பெறச் செய்ய :**
பழைய நிலைச் சொத்துகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகையில் புதிய நிலைச் சொத்துகளை இடம்பெறச் செய்ய தேய்மானம் நீக்குதல் அவசியம்.

**2.தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் :**

| அகம் | புறம் |
|---|---|
| 1.தேய்வு | 1.வழக்கொழிவு |
| 2.உபயோகிக்கப்படாமை | 2.காலப் போக்கு |
| 3.பராமரிப்பு இன்மை | 3.கால நிர்ணயம் |
| 4.வெறுமையாதல் | |

1.**தேய்வு** புலனாகும்சொத்துகளை தொடர்ந்து பயன்படுத்துவதால் தேய்வுகாரணமாக தேய்மானம் ஏற்படுகிறது.
2.**உபயோகிக்கப்படாமை** தொடர்ந்து ஒருஇயந்திரத்தை பயன்படுத்தாமல் இருந்தால் அது தன்உபயோகத்தன்மையை இழந்து விடுகிறது
3.**பராமரிப்புஇன்மை** ஒருஇயந்திரம் சரிவர பராமரிக்கப்படவில்லையெனில் அது தன்உபயோகத்தன்மையை விரைவாக இழந்து விடுகிறது
4.**வெறுமையாதல்**:சுரங்கங்கள் எண்ணெய்கிணறுகள் போன்றவற்றிலிருந்து கனிம வளங்களை தொடர்ந்து வெளியே எடுப்பதால் அது தன் மதிப்பை இழக்கிறது.
1.**வழக்கொழிவு:** புதியகண்டுபிடிப்புகள் முன்னேறிய செய்முறைகள் தொழில் நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக பழைய சொத்துகள் பயனற்றவை ஆகின்றன.
2.**காலப்போக்கு:** சொத்துக்களைபயன்படுத்தாவிட்டாலும் பருவமாற்றம் காற்று மழைபோன்றஇயற்கைகாரணிகளால்மதிப்பு குறைகிறது.
3.**காலநிர்ணயம்:** குத்தகை பதிப்புரிமை தனியுரிமை போன்றவை குறிப்பிட்ட காலத்திற்கு பெறப்படுகின்றன.குறிப்பிட்ட காலம் கடந்த பிறகு இவ்வகை சொத்துகள் மதிப்பை இழந்து விடுகின்றன.

**3.தேய்மானமுறைகள்:1.நேர்கோட்டு முறையில் தேய்மானம் :** சொத்தின் மொத்த அடக்க விலை மீது தேய்மானம் கணக்கிடுவதாகும். இம் முறையில் சொத்தின்வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட தொகையே ஆண்டுதோறும் தேய்மானமாக நீக்கப்படுகிறது.
2.**குறைந்த செல் மதிப்பு முறை:** இந்த முறையில் சொத்தின் குறைந்த செல் இருப்பு மீது நிலையான விகிதம் ஒவ்வொரு ஆண்டும் தேய்மானமாக கணக்கிடப்படுகிறது. இம்முறையில் தேய்மானம் ஆண்டுதோறும் குறையும்.
3.**ஆண்டுத்தொகை முறை :** ஆண்டுத்தொகை அட்டவணையை கொண்டு தேய்மானத்தொகை நிர்ணயிக்கப்படுகிறது. குத்தகை மீது தேய்மானம் கணக்கிட இம்முறை ஏற்றது.
4.**தேய்மான நிதிமுறை** ஒவ்வொரு ஆண்டும் பெறப்படும் வட்டியும் தேய்மானத்தொகையும் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகின்றன. சொத்தைமாற்றவேண்டியநிலைவரும்பொழுது,முதலீடுசெய்யப்பட்டுள்ளபத்திரங்கள்விற்கப்பட்டு,அத்தொகைமூலம்புதியசொத்து வாங்கப்படும்.
5.**காப்பீட்டு முறையில் தேய்மானம்:** இம் முறையில் சொத்து காப்பீடு செய்யப்பட்டு முனைமம் செலுத்தப்படுகிறது. காப்பீட்டுக் காலம் முடியும் போது தொகை பெறப்பட்டு பழையசொத்துக்கு பதிலாக புதியசொத்துவாங்கவகை செய்யப்படுகிறது.
6.**மறுமதிப்பீட்டு முறையில் தேய்மானம் :** இம் முறையில் விடு கருவிகள் போன்ற சொத்துக்களின் ஆண்டு இறுதிமதிப்புஆண்டுதொடக்கமதிப்போடுஒப்பிடப்படுகிறது.இரண்டுக்குமுள்ளவேறுபாடுதேய்மானமாககருதப்படுகிறது

**4.ரொக்கதிட்டப்பட்டியல்** இது எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய ரொக்கப் பெறுதல் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் குறித்த ஒரு அறிக்கையாகும். இதனை நிதித்திட்டப்பட்டியல் என்றும் அழைக்கலாம்.
**திட்டபட்டியல் தன்மைகள்: 1.**திட்டப்பட்டியல் எதிர்காலம் குறித்து முன்னரே தயாரிக்கக் கூடியவை ஆகும். **2.**இது பணம் அல்லது அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் தெரிவக்கக்கூடியவை ஆகும். **3.**இது திட்ட இலக்கை அடைவதற்கான வழி
**திட்டப்பட்டியல் நன்மைகள்:** (1)போதுமான ரொக்க இருப்பை பேண உதவுகிறது.(2)இது மேலாண்மைக்கு பயனளிக்கும் வகையில் செய்திகளை அளிக்கிறது. (3)நிதித் தேவையை பூர்த்தி செய்யும்திட்டம் தீட்ட (4)ரொக்க இருப்பை கட்டுப்படுத்த உதவுகிறது

**5.ரொக்க பெறுதல்கள்:** 1.ரொக்க விற்பனை, 2.வாடிக்கையாளர்களிடமிருந்து பெறக்கூடிய தொகை, 3.வட்டி கழிவு பங்காதாயம் போன்ற வணிக வரவுகள். 4.சொத்து விற்றது. 5.பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரம் மூலம் பெறப்படும் தொகை 6. பெற்ற கடன்
**ரொக்க செலுத்துதல்:** (1)ரொக்க கொள்முதல் (2)சரக்களித்தோருக்கு செலுத்தக்கூடிய தொகை(3)கூலி அலுவலக செலவுகள் விற்பனை செலவுகள் போன்ற வணிக செலவுகள் (4)செலுத்த வேண்டிய வட்டி வருமான வரி பங்காதாயம் போன்றவை (5)சொத்துக்களை வாங்குதல் 6.கடனை திரும்ப செலுத்துதல்.
**ரொக்க திட்ட பட்டியல் தயாரிப்பு முறைகள்:** 1.பெறுதல் மற்றும் செலுத்துதல் முறை, 2.சரிக்கட்டபட்ட இலாப நட்ட கணக்கு முறை (அ) ரொக்கஓட்ட முறை, 3.இருப்புநிலைக் குறிப்பு முறை.

**6.ரொக்கதிட்டப்பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகள்**
நிலை1 தொடக்கரொக்கயிருப்பை எடுத்துக்கொள்க.
நிலை2 அம் மாதத்தில் பெறவேண்டிய அனைத்து ரொக்கப் பெறுதல்களை மதிப்பிட்டுக் கூட்டுக
நிலை3 அம்மாதத்தின் மொத்த ரொக்கயிருப்பை கணக்கிடுக
நிலை4 அம்மாதத்தின் மொத்த ரொக்க செலுத்துதல்களை கழிக்க
நிலை 5 இறுதி ரொக்கயிருப்பை கணக்கிடுக.

**7.கூட்டாண்மையின் வரைவிலக்கணம்:** இந்திய கூட்டாண்மை சட்டம் 1932 பிரிவு 4ன் படி அனைவருமோ, அனைவரின் சார்பில் அவர்களில் எவரோ, ஒரு தொழிலை நடத்தவும், அதில் ஏற்படும் இலாபத்தை பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டு அந்த நபர்களிடையே ஏற்படும் உறவு ஆகும்
**கூட்டாண்மை சிறப்பியல்புகள்:** 1) **இரண்டும் அதற்கு மேற்பட்ட நபர்கள் கொண்ட குழுமம்.** கூட்டாண்மை உருவாக்க குறைந்த பட்சம் இரண்டு நபர்கள் இருக்க வேண்டும். அதிக பட்சமாக வாங்கித் தொழிலாக இருந்தால் 10 நபர்களும், மற்ற தொழிலாக இருந்தால் 20 நபர்களும் இருத்தல் வேண்டும்.

2)**கூட்டாளிகளிடையஉடன்பாடு** கூட்டாளிகளிடையே ஏற்பாடு உடன்பாட்டின் காரணமாகவே அவர்களிடையே உறவு ஏற்படுத்தப்படுகிறது.
3) **இலாபப் பங்கேற்பு** கூட்டாண்மைஉடன்பாடு கூட்டாளிகளின் தொழிலின் இலாபநட்டத்தைப் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்கிறது.
4) **சட்டப்படியான தொழில்** கூட்டாண்மை உடன்பாடு சட்டப்படியான தொழில் புரிந்து இலாப ஈட்டுவதாக இருத்தல் வேண்டும்.
5) **அனைவருமோ (எ) அவர்களில் எவருமோ தொழில் செய்தல்** கூட்டாண்மையின் மிக முக்கியமான சிறப்பியல்பு பரஸ்பர மற்றும் உட்கிடை முகமை ஆகும்.

**8.நற்பெயர்:**நற்பெயர் என்பது நிறுவனம் வாடிக்கையாளருக்கு செய்துள்ள சிறந்த சேவை மற்றும் பொருட்களின் தரத்தினை அடிப்படையாக கொண்டு ஈட்டியுள்ள மதிப்பின் அளவீடு ஆகும். நற்பெயர் ஒருபுலனாக சொத்து.
**நற்பெயர் பாதிக்கும் காரணிகள் : அ)தரம்** : நிறுவனத்தின் பொருள் தரமானதாக இருப்பதினால் ஏற்பட்டுள்ள நன்மதிப்பு காரணமாக பொருட்கள் உடனடியாக விற்பனை ஆகின்றன.
**ஆ)இடம்** : நிறுவனம் அமைந்துள்ள இடம் முக்கியமான இடமாக இருந்தால் மட்டுமே மதிப்பு கூடும்.
**இ)சிறந்த மேலாண்மை** : நிறுவனம் சிறப்புடன் மேலாண்மை செய்யப்படுவதன் மூலம் அதிக லாபம் , ஈட்டப்படுவதால் நிறுவனததின் மதிப்பு உயர்வடைகிறது.
**ஈ)போட்டி** : போட்டி இல்லாமலோ அல்லது போட்டி குறைவாக இருந்தாலோ மதிப்பு கூடும்.
**உ)புனையுரிமையின்நன்மைகள்**:வணிகக்குறி புனையுரிமைஅல்லதுபதிப்புரிமை ஆகியவற்றைபெற்றிருந்தால் நிறுவனத்தின்மதிப்பு உயரும்.
**ஊ)காலம்**: நிறுவனம் தொடர்ந்து பல ஆண்டுகள் லாபம் ஈட்டுவதால் மதிப்பு உயரும் .
**எ)வாடிக்கையாளர்களின் மனப்பாங்கு** ஒரு நிறுவனம் பெற்றுள்ளவாடிக்கையாளர்களின் மனப்பாங்கு முக்கியமாகும். அதிக வாடிக்கையாளர்கள் மூலம் நற்பெயர் கூடும்.
**ஏ)தொழிலின் தன்மை** : நிறுவனத்தின் நிலைத்த தேவையினால் அதிக லாபம் ஈட்டப்படுகிறது.

| 9.நிலை முதல் முறை | மாறுபடும் முதல் முறை |
|---|---|
| 1.முதல் தொகை எப்போதும் நிலையாக இருக்கும் | 1. முதல் தொகை ஆண்டுக்காண்டு மாறுபடும் |
| 2.முதல் கணக்கு, நடப்பு கணக்கு என இரு கணக்குகள் உண்டு | 2.முதல் கணக்கு மட்டுமே உண்டு. |
| 3.எல்லாசரிகட்டுதல்களும் நடப்பு கணக்குகளில் பதியப்படும் | 3.எல்லாசரிகட்டுதல்களும் முதல் கணக்குகளில் பதியப்படும் |
| 4.நடப்பு கணக்க பற்று இருப்பையும் வரவிருப்பையும் காட்டும் | 4.முதல் கணக்கு எப்போதும் வரவிருப்பையே காட்டும் |

**10.தியாக விகிதம் ஆதாய விகிதம் வேறுபாடு :**

| அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|
| பொருள் | புதிய கூட்டாளிகளுக்கு தருவாதாக பழையகூட்டாளிகள் ஒப்புக்கொண்ட தியாகபங்குகளின் விகிதமாகும். | தொடரும் கூட்டாளிகளுக்கு வெளிச்செல்லும் கூட்டாளிகளிடமிருந்து பெற்ற பங்குகளின் விகிதமாகும். |
| நோக்கம் | உள்வரும் கூட்டாளி பழைய கூட்டாளிகளுக்கத் தரும் ஈட்டுத் தொகையை நிர்ணயிக்க உதவுகிறது. | வெளிச் செல்லும் கூட்டாளிகளுக்கு தொடரும் கூட்டாளிகள் தரும் ஈட்டுத்தொகையை நிர்ணயிக்க உதவுகிறது. |
| கணக்கிடுல் | பழைய விகிதத்திலிருந்து புதிய விகிதத்தை கழித்து கணக்கிடப்படுகிறது | புதிய விகிதத்திலிருந்து பழைய விகிதத்தை கழித்து கணக்கிடப்படுகிறது |
| காலம் | கூட்டாளி ஒருவர் சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது | கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது |

**11.கூட்டாண்மை உடன்பாடு இல்லாவிடில் செயல்படுத்த வேண்டிய கணக்கியல் விதிகள்:**
1.**முதல்மீது வட்டி:** கூட்டாளிகளின் முதல் மீது வட்டி அனுமதிப்பதில்லை. கூட்டாண்மை உடன்பாட்டில் முதல்மீது வட்டி அனுமதித்திருந்தால் இலாபமாக இருக்கும் பொழுது மட்டுமே வழங்கலாம்.
2. **எடுப்புமீது வட்டி:** கூட்டாளிகளின் எடுப்புமீது வட்டி அனுமதிக்கக் கூடாது.
3. **கூட்டாளிகளின் ஊதியம் மற்றும் கழிவு:** கூட்டாண்மை ஒப்பந்தத்தில் குறிப்பிடாதபோது நிறுவனம் எந்தவொரு கூட்டாளிக்கும் ஊதியமோ கழிவோ வழங்கக்கூடாது.
4. **கடன் மீது வட்டி:** ஏதேனும் ஒரு கூட்டாளி நிறுவனத்திற்கு கடன் வழங்கியிருந்தால் அக்கடனுக்கு 6% வட்டி வழங்கப்படவேண்டும்.
5. **இலாபபங்கு விகிதம்:** கூட்டாளிகள் அவர்கள் வைத்த முதல் தொகையை கணக்கில் கொள்ளாமல் இலாப நட்டத்தை சமமாக பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

**12.தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள் 1. சொத்தின் அடக்கவிலை** சொத்தின் அடக்கவிலை, நிறுவுகைச் செலவு, முதலினத்தன்மை கொண்ட மேம்படுத்தும்செலவுகள் போன்றவற்றை உள்ளடக்கியது.
**2.எதிர்நோக்கும்பயனளிப்பு காலம்:**ஒருசொத்தைஎவ்வளவுகாலம்பயன்படுத்தலாம்என்பதை இது உணர்த்துகிறது.
**3. இறுதி மதிப்பு:** ஒரு சொத்தின் பயனளிப்பு காலம் முடிவடைந்த பிறகு அதை விற்கும் பொழுது கிடைக்கக் கூடிய மதிப்பு இறுதி மதிப்பு எனப்படும். இது எறிமதிப்பு என்றும் அழைக்கப்படும்.

**13.தேய்மானம் தொடர்பான கலைச்சொற்கள்: 1.போக்கெழுதுதல்:**இது நற்பெயர் புனையுரிமை மற்றும் தொடக்கச்செலவுகள் போன்ற புலனாக சொத்துக்களின் மதிப்பு குறைதலைக் குறிக்கிறது.
**2.வெறுமையாதல்**:சுரங்கங்கள் எண்ணெய்கிணறுகள் போன்றவற்றிலிருந்து கனிம வளங்களை தொடர்ந்து வெளியே எடுப்பதால் அது தன் மதிப்பை இழக்கிறது.
**3.வழக்கொழிவு** புதியகண்டுபிடிப்புகள் முன்னேறிய செய்முறைகள் தொழில் நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக பழைய சொத்துகள் பயனற்றவை ஆகின்றன.

**14.நேர்கோட்டு முறை தேய்மானத்தின் நன்மைகள்: 1.எளிமை:** இம்முறை மிக எளிதானதோடு, எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகும்.
**2. எளிமையான கணக்கீடு:** தேய்மானத் தொகையையும், தேய்மான விகிதத்தையும் கணக்கீடு செய்வது மிகவும் எளிது.
**3. சொத்தின் மதிப்பு முழுமை நீக்கம்:** இம் முறையில் சொத்தின் ஏட்டு மதிப்பு அதன் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு முழுமையாக நீக்கப்படுகிறது.
**நேர்கோட்டுமுறை தேய்மானத்தின் தீமைகள்:** சொத்தின் பயன்பாடு இறுதி ஆணடுகளைவிடத் தொடக்க ஆண்டுகளில் அதிகமாக இருந்தாலும், தேய்மானத் தொகை அனைத்து ஆண்டுகளிலும் சமமாக நீக்கப்படுகிறது.

**15.குறைந்த செல் இருப்பு தேய்மானமுறை நன்மைகள்: 1. பல்வேறு ஆண்டுகளின் இலாப நட்டக் கணக்கில் சீரான தாக்கம்:** பொதுவாக தொடக்க ஆண்டுகளில் தேய்மானத் தொகை அதிகமாகவும், பராமரிப்புச் செலவு குறைவாகவும் இருக்கும். அதே போன்று இறுதி ஆண்டுகளில் தேய்மானத் தொகை குறைவாகவும், பராமரிப்புச் செலவு அதிகமாகவும் இருக்கும். எனவே மொத்தச் செலவு ஒவ்வொரு ஆண்டும் சீராக இருப்பதை இம்முறை உறுதி செய்கிறது.
**2. வருமான வரி விதிக்கும் அதிகாரிகளின் ஏற்பு:** இம்முறையை வரி விதிக்கும் அதிகாரிகள் ஏற்கின்றனர்.
**3. நியமான முறை:** ஒவ்வொருஆண்டும் சொத்தின்குறைந்தஇருப்புமீது தேய்மானம்கணக்கிடப்படுவதால் இது நியமான முறை ஆகும்.
**குறைந்த செல் இருப்பு தேய்மானமுறையின் தீமைகள்:** சொத்தின் மதிப்பை முற்றிலும் போக்கெழுதுவதற்கான தேய்மான விகிதத்தினை நிர்ணயிக்க இயலாது.